# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1997 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தர்மராஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 7.60** **தபாற் செலவு : ரூபா 3.50**

# 1997 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தர்மராஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் 1

[1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.— ஓ.13/93

## தர்மராஜ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"தர்மராஜ மன்றம்" என்றழைக்கப்படுவதும், அறியப் படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப் பட்ட எல்லாக் குறிக்கோள்களையும், அத்துடன் கருமங் களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல் வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள் களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தர்மராஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தர்மராஜ மன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "தர்மராஜ மன்றம்" என்னும் தர்மராஜ மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

பெயர்மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருக்க வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது: —

(அ) கல்வி, கலாச்சார, சமூக சுகாதார மற்றும் ஆத்மீக வளர்ச்சி அத்துடன் செய்முறைகளுக்கான மத்தியஸ்தானமொன்றை நிறுவுதல் ;

(ஆ) மக்களின் திறமை மற்றும் முன்வந்துழைத்தலை அவர்களுடைய அபிவிருத்திக்காக உபயோகப் படுத்தல் ;

(இ) தேவையான வளங்களை அதன் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பெற்று, அத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ;

(ஈ) கற்கைக் குழுக்கள், மாநாடுகள், வேலைக்களங்கள், சொற்பொழிவுகள், உரையாடல்கள், விவாதங்கள், தம்ம பாடசாலைகள் மற்றும் போயாதின நிகழ்ச்சிகளை நடாத்துதல்;

(உ) புத்த சமயத்தையும் பௌத்த கலாச்சாரத்தையும் கற்பதற்காக, அளிப்புகள், புலமைப் பரிசில்கள், உதவிப் பணங்கள் மற்றும் பரிசுகளை வழங்கல்;

(ஊ) அன்பளிப்பு, மானியக் கொடுப்பனவுகள், பங்களிப்பு, காசாகவோ அல்லது பொருளாக கொடுத்தல், பெற்றுக் கொள்ளல், சேகரித்தல்;

(எ) உதவி, ஒத்தாசை தேவைப்படும் மாணவர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கல்;

(ஏ) கற்கைக் குழுக்கள், நூல் நிலையம், வாசிகசாலை அத்துடன் பயிற்சி நிலையங்களை நிறுவுதல்;

(ஐ) நூல்கள், வார வெளியீடுகள், மற்றும் மஞ்சரிகள், என்பவற்றை சேகரித்தல், அச்சிடல், வெளியிடல் மற்றும் அவற்றை விநியோகித்தல்;

(ஒ) ஏனைய ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட அமைப்புகளுடன் ஒத்தாசையாக செயற்படல்;

(ஓ) நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படல்; அத்துடன்

(ஔ) தர்மராஜ வித்தியாலயத்தின் அபிவிருத்தியை மேம்படுத்தல்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறேதெனும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமான வாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும்,மானியக் கொடைகளைப் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதியங்களை முதலீடு செய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக் கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப்படக்கூடிய ஆறுபேருக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட முகாமைச்

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

சபையொன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய திகதியன்று, மன்றத்தின் முகாமைக் குழுவில் உறுப்பினர்களாகவிருந்தோரையும், இச்சட்டத்தின் அட்டவணையில் பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளோரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) காலத்திற்குக் காலம் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை கொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையின் பாகுபாடும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும்;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(இ) முகாமைச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும், அதன் தத்துவங்களும், முகாமைச் சபை உறுப்பினர்களின் ஒழுக்கமும், கடமைகளும், பதவிக் காலமும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், ஒழுக்கமும், கடமைகளும் பணிகளும்;

(உ) முகாமைச் சபையின் கூட்டங்களில் அவதானிக்கப் பட வேண்டிய நடவடிக்கை முறையும், அக் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும் அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் கருமமாற்றுதலும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக் காப்பும், அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக்காய்வு செய்தலும்;

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் (1) ஆம் உட்பிரிவின் விதியொன்று என்றாற்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம், சேர்க்கப் படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கூட்டுத்தாப னத்தின் தற்போதைய விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, பொறுப்புகள், நன்கொடைகள், சேகரிப்பு நிதிகள், அல்லது உதவுதொகைகளாகக் கிடைக்கக் கூடிய எல்லாப் பணங்களும், முகாமைச்சபை தீர்மானிக்கக் கூடியதான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில், கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப் படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத் தின் நிதியம்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை மறுசீரமைப் பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது சீராக்குவதற்குமாகக் கூட்டுத்தாபனம், ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கை அல்லது கடனாழ்நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும் செயற்படுத்துவதிலும்,நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலனவையும், கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படற்பாலனவையுமான கடன்கள்.

8. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் மன்றத்திற்குக் கிடைக்கக்கூடிய எல்லாக் கடன்கள், ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் யாவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத் தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக் கலாம்.

9. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு,நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் விதமாகக் கிடைக்கக்கூடிய ஏதாவது அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், சட்டதிட்டங்களுக்குக்கீழ் அந்த ஆதனங்களை விற்கவும் ஈடுவைக்கவும், குத்தகைக்குக் கொடுக்கவும், பரிமாறிக் கொள்ளவும் அல்லது வேறு வகையில் கையாளவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

10. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது ஏதாவது சான்றுப்பத்திரத்திலிடப்படுவதற்குத் தாம் சமுக மளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிட வேண்டிய கூட்டுத்தாபனத்தின் தலைவர், கௌரவ செயலாளர் அல்லது கௌரவ பொருளாளர் முன்னிலையிலன்றி, எச்சாதனத்திலும் பொறிக்கப் படுதலாகாது. அப்படி கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஒருவர் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட, குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம், அவர்களிலிருந்து ,அல்லது அவர்களின் கீழ் உரிமை

கோருபவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாகவோ பாதிப்பதாகவோ இருத்தலாகாது.

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

(பிரிவு 5(2) )

## அட்டவணை

முகாமைச் சபை

தலைவர் : திரு. ரி. டபிள்யூ. டி. எஸ். அமரசேகர

கௌரவ செயலாளர் : கேர்னல் ஆர். பீ. நாரம்பனாவே சமாதான நீதிவான் இ.டி.

கௌரவ பொருளாளர் : திரு. டபிள்யு. கே. டட்லி குணதிலக

ஏனைய உறுப்பினர்கள் :

1. திரு. டீ. ஜீ. ஏ. பெரேரா
2. திரு. பி. என். கருணாரத்ன
3. திரு. டபிள்யு. வீரசிங்க
4. திரு. சீ. பீ. இலங்கசிங்க
5. திரு. ரி. பீ. தமுனுபொல
6. பேராசியர் அனுருத்த செனெவிரத்ன
7. தேசபந்து டாக்டர் நிஹால் டபிள்யு கருணாரத்ன
8. திரு. டீ. எம். தர்மதிலக
9. திரு. ஏ. பி. குணரத்ன
10. கேர்னல் அசோக முதன்நாயக
11. திரு. ஏ. பீ. டபிள்யு. ஜயசுந்தர
12. திரு. கே. பீ. எஸ். அபேகோன்
13. திரு. கே. பீ. ஏகநாயக்க
14. திரு. பி. எல். ஆதர் அல்விஸ்
15. டாக்டர் அபே குணபால
16. திரு. காமினி குணவர்தன
17. திரு. ரி. பீ. தலவத்த
18. திரு. சி. மெத்தாநந்த
19. டாக்டர் ஜே. ஏ. புத்ததாச
20. திரு. எஸ். ஜே. முனசிங்க
21. திரு. சேன அல்விஸ்

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 (வெளிநாட்டு) ரூபா 1,849 ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.